RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21s211

# காரைக்கால் அம்மையாரின் இறைநெறி

**பொ. கலாவதி [அ, *]**

[அ] தமிழ்த்துறை, மாநிலக்கல்லூரி, சென்னை-600005, தமிழ்நாடு, இந்தியா.

# Theology of the Karaikkal Ammaiyar

**P. Kalavathi [a, *]**

[a] Department of Tamil, Presidency College, Chennai-600005, Tamil Nadu, India

* Corresponding Author: premkala10@gmail.com

Received: 04-01-2021
Revised: 15-04-2021
Accepted: 16-04-2021
Published: 30-04-2021

Check for updates

## ABSTRACT

Since the time man began to become intelligent, the spirit of God has been developing. Man is a man of the nature of keeping the mind sweet forever. It is the divine principle that helps people to raise. The first song of Karaikal Ammaiar, who had received the knowledge of truth, was the wonderful Thiruvanthathi. The wonderful thiruvanthathi is a novel trend. They are pleasant and simple to recite. The nature of the intellect of Knowledge is clear. He is the first to be the lord of the temple. The purpose of this article is to examine the theology of Karaikal Ammaiar

**Keywords:** Thiruvanthathi, Karaikal Ammaiar, God, Temple.

## முன்னுரை

தனக்கு மேற்பட்ட சக்தியாக மனிதன் கண்டு கொண்ட ஒரு விஷயமே இறைநெறி கோட்பாடாகியது. கடவுள் எனும் சொல் யாவற்றையும் கடந்தவன் என்று பொருள் குறிக்கும். மனிதர்கள் தங்கள் நாகரீகம், பண்பாடுகளிற்கேற்ப வேறு வேறு கடவுளர்களை வணங்கி வருகின்றனர். கடவுள் மேல் மனிதன் கொண்ட உயரிய அன்பு, பயம், மரியாதை ஆகிய உணர்வுகளைப் பக்தி எனலாம். ஒவ்வொரு கடவுளர்களைப் பின்பற்றி ஒவ்வொரு மதங்கள் தோற்றம் பெற்றன. மதங்கள் பக்தி நெறியை மட்டுமன்றி நன்னெறிகளையும் போதனை செய்கின்றன.

சிவபெருமானை அடியொற்றி எழுந்த மதம் சைவமாகும். இம்மதத்தை வளர்த்ததில் சிவனடியார்களான 63 நாயன்மார்களுக்குப் பெரும் பங்குண்டு. அந்நாயன்மார்களில் ஒருவர் காரைக்கால் அம்மையார் ஆவார். இவரின் மூன்று படைப்புகளும் சிவபெருமானையே தலைவனாகக் கொண்டுள்ளன. அவற்றில் ஒன்றானதும் தமிழின் முதல் அந்தாதி வடிவமுமான அற்புதத் திருவந்தாதியில் பல்வேறு நிலைகளில் அம்மையார் சிவன்பால் கொண்ட அன்பையும், பக்தியையும் வெளிப்படுத்துகிறார்.

## காரைக்கால் அம்மையார்

பக்தி இயக்க காலத் தொடக்கத்தில் தமிழகத்தில் சிவனைப் பற்றிய கருத்துக்கள் மேலோங்கி இருந்த நிலையில் பெண்பாற் புலவரான காரைக்கால் அம்மையார் சிவனின் பெருமைகளையும், சிறப்புக்களையும் பக்திப்பாடல்களாக வடிவமைத்துத் தந்துள்ளார். காரைக்கால் அம்மையாரின் பாடல்கள் சைவ சமயம் சார்ந்தவர்களுக்கு சிவ வழிபாட்டையும் அவற்றின் பயன்களையும் அறிய உதவுகிறது எனலாம். பக்தி இலக்கிய வளர்ச்சியை வித்திட்ட பெருமைக்குரியவர் காரைக்கால் அம்மையார்.

சைவத்தை வளர்த்த 63 நாயன்மார்களில் ஒருவர் காரைக்கால் அம்மையார் ஆவார். நாயன்மார்களில் அமர்ந்த கோலத்திலிருப்பது இவரின் தனிச்சிறப்பாகும். இவர் காரைக்காலிலே தனதத்தன் என்னும் பெரு வணிகனுக்கு மகளாகப் பிறந்தார். இவருக்குப் பெற்றோரிட்ட பெயர் புனிதவதி என்பதாகும். பரமதத்தன் என்பவரை இவருக்கு மணம் முடித்து வைத்தார்கள். சிறுவயது முதலே மிகுந்த சிவபக்தி கொண்ட இவரை மாங்கனி பெற வைத்து இறைவன் ஆட்கொண்டார் என்பதை

"பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாங் காதல்

சிறந்துநின் வேசடியே சேர்ந்தேன் - நிறத்திகழும்

மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே

எஞ்ஞான்று தீர்ப்ப திடர்"

என்ற இப்பாடல் வரிகள் மூலம் சிறு வயது முதலே அம்மையார் சிவ பக்தியோடும் இசை, மற்றும் கல்வியறிவோடும் விளங்கியது தெளிவாகிறது (Kathirmurugu, 2007).

இவரின் தெய்வநிலை உணர்ந்து கணவன் நீங்கவே பேய்வடிவம் பெற்றுத் தொடர்ந்து அம்மையார் இறைவனைக் காண கயிலாயம் சென்றார். கயிலாயம் இறைவன் உறையும் புனிதமான இடம் என்பதால் அங்கு தரையில் கால் ஊன்றாமல், தலைகீழான நிலையில் அம்மையார் நடந்து சென்றார். இதனை பார்த்த சிவபெருமான் "அம்மையே வருக - அமர்க" என அழைத்து நீ வேண்டுவன கேள் என்றார். அதற்கு அம்மையார்

"பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்

உன்னை என்றும் மறவாமை வேண்டும்

உன் அடியின் கீழ் இருக்க திருவருள்புரிய வேண்டும்"

என்றார். அவ்வாறே இறைவன் அவருக்கு தன் திருத்தாண்டவம் காட்டி திருவாலாங்காட்டிற்கு வரப்பணித்து அங்கு அருளிய இறைவன் தன் திருவடிக் கீழ் என்றும் இருக்க அருளினார். அங்கு சென்ற அம்மையார் 11 பாடல்களை கொண்ட திருப்பதிகம் பாடி இறைவனின் நிழலின் கீழ் வீற்றிருக்கலானார். சிவனைப் போற்றி அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலாங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் ஆகிய மூன்று படைப்புக்களையும் இயற்றியுள்ளார். இவை ஏழாவது சைவத்திருமுறையில் வைத்துத் தொகுக்கப்பட்டுள்ளன (Natarajan, 2006).

## சிவபெருமானின் அருட்திறம்

காரைக்கால் அம்மையார் சிவபெருமான் மீது அளவில்லாப் பக்தி கொண்டவர். அப்பக்தி மிகுமையால் தன்னுடைய அற்புதத் திருவந்தாதியில் பல்வேறு இடங்களில் சிவபெருமானின் அழகு நலன்களையும், சிறப்பு மிக்க தன்மைகளையும் நயம்பட எடுத்துரைக்கின்றார்.

பாற்கடலில் அமுதம் கடைந்தபோது வெளிப்பட்ட கொடிய நஞ்சினைத் தேவர்களைக் காப்பதற்காக உண்டு அவ்விடம் மிடற்றில் தங்கியமையால் சிவபெருமானின் மிடறானது நீலநிறமாக மாறியது. அம்மிடறானதுஎன்னும் ஒளி பொருந்தியதாகவே இருக்கும் என்பதை,

"முன்னஞ்சத் தாலிருண்ட மெய்யொளிசேர் கண்டத்தான்"

என்ற அற்புதத் திருவந்தாதி அடியினூடாக அம்மையவர்கள் எடுத்தியம்புகிறார் (Kathirmurugu, 2007). அவ்வாறே சிவபெருமானின் மிடறானது நீல வைரக்கல்லைப் போன்று ஒளி வீசக்கூடிய அழகு வாய்ந்தது என்பதை,

"நீல மணிமிடற்றா னீர்மையே……"

எனும் வரிகள் மூலம் மொழிந்துள்ளார் (Kathirmurugu, 2007).

சிவபெருமான் அழகிய நீண்ட சடைமுடியைக் கொண்டு விளங்குபவன். அச்செம்மைமிக்க சடையின் மேல் பிறை நிலவை அவன் சூடியிருப்பான். அப்பிறையின் ஒளியானது கழுத்தின் வழியாக மார்ப்பு நோக்கிச் சென்று வழிவதைப் போல் ஒளிர்கிறது. இதை,

"பெருககொளிய செஞ்சடைமேற் பிள்ளைப் பிறையின்

ஒருகதிரே போந்தொழுகிற் றொக்கும்"

என்ற பாடல் மூலம் அம்மையார் விளக்கியுள்ளார் (Kathirmurugu, 2007).

திரிபுரம் எரிந்த விரிசடைக் கடவுளாக விளங்குபவர் சிவபெருமான் ஆவார். அசுரர்களினால் அழிக்க முடியாதபடி அமைக்கப்பட்ட முப்புரங்களையும் சிவபெருமான் ஓரம்பினால் தகர்த்தவன். இவ்வாறே ஆணவம், கன்மம், மாயை என்னும் மும் மலங்களையும் சிறு புன்னகையால் எரித்து அழிபான் என்பதை,

"பரவித் தொழுதிரந்தோம் பன்னாள் - முரணழிய

ஒன்னாதார் மூவெயிலும் ஒரம்பால் எய்தானே"

என்ற அடிகளில் கூறி அவன் முப்புரம் எரித்த நிகழ்வினைப் பகன்றுள்ளார் (Kathirmurugu, 2007).

சிவபெருமான் அடியாரின் உள்ளத்தில் விரும்பிக் குடியிருப்பவன். அத்தன்மையுடைய இறைவன் தன்னை வணங்கும் அடியவர்க்கு எளிமையாகக் காட்சியளிப்பான். கைதொழுது ஏற்றுவோருக்கும் காட்சி தருவான். அன்பால் தன் உள்ளத்தில் காண விரும்புவோர்க்கும் சோதியாகக் காட்சி தருவான் என்பதை,

"காண்பார்க்குங் காணலாந் தன்மையனே கைதொழுது

காண்பார்க்குங் காணலாந் காதலாற் - காண்டார்க்குச்

சோதியாய்ச் சிந்தையுள்ளே தோன்றுமே தொல்லுலகுக்

காதியாய் நின்ற அரன்"

என்ற பாடலில் இறைவன் அடியோருக்குக் காட்சி தரும் பாங்கினை உரைத்துள்ளார் (Natarajan, 2006).

'வேயுறு தோளி பங்கன்' என்று ஞானசம்பந்தர் குறிப்பிட்டதைப் போல தன்னுடைய இடப்புறத்திலே உமையம்மையைக் கொண்டு அர்த்த நாரிஸ்வரனாக விங்குபவன் சிவன். இறைவனின் இத்தன்மை ஆணுக்குப் பெண் என்னும் நிகரானவளே என்பதைக் காட்டுகின்றது. இப்படி அழகிய கரிய விழிகளை உடைய உமையம்மைக்குத் தன்னுடைய இடப் பாகத்தை வழங்கியவன் இறைவன் என்பதை,

"பெறத்தானும் ஆதியோ பேதாய் - நிறத்த

இருவடிக்கண் ஏழைக் கொருபாகம் ஈந்தான்"

என்ற அடிகளின் மூலம் அம்மையார் விளங்கியுள்ளார் (Natarajan, 2006).

## காரைக்கால் அம்மையாரின் பக்திப்பாங்கு

தன்னுடைய அழகிய மேனி நீங்கப் பெற்று, பேயுருவம் ஏற்று, கயிலாய மலை சென்று, சிவபெருமானைத் தரிசிக்குமளவுக்கு உயர்ந்த பக்தியைக் கொண்டவர் காரைக்கால் அம்மையார். இவ்வாறு இவர் கொண்ட அளப்பெரும் பக்தியானது அற்புதத் திருவந்தாதியிலே பல இடங்களில் வெளிப்படுகின்றது.

காரைக்கால் அம்மையார் தன் வாழ்வை விரைவில் முடித்து இறைவன்தாழ் சேர வேண்டும் என்ற வேட்கை கொண்டு சிவனிடம் இப்பூமியில் பிறந்து பேசக் கற்றுக்கொண்ட நாள் முதலாக

உன்னுடைய பாதங்களைத் தவிர வேறு பாதங்களைத் தொழவில்லை தேவர்களின் தலைவனே என் பிறவித்துயர் எப்போது நீக்குவாய் என்று கேட்கிறார்.

துயரங்கள் வாழ்வில் சூழும் போதெல்லாம் இறைவனை நினைத்தால் இனம்புரியாத விடுதலை பிறக்கும். துன்பத்தில் மட்டுமன்றி இன்பத்திலும் அவனை நினைந்தேற்ற வேண்டும். இதையே அம்மையும் 'நினைக்கும் போதெல்லாம் இனிமையாக இருக்கின்ற ஈசனை மனத்தில் இன்பம் தரும் பொருளாக வைத்தேன். அவனையே இறைவனாய்க் கொண்டு மகிழ்ச்சி பெற்றேன் அப்பேற்றிலும் அரிதான பேறொன்று உள்ளதோ?' என்று வினவுகிறார். இதனை,

"எனக்கினிய எம்மானை ஈசனை யானென்று

மனக்கினிய வைப்பாக வைத்தேன் - எனக்கவனைக்

கொண்டேன் பிரனாகக் கொள்வதுமே யின்புற்றேன்

உண்டே யெனக்கரிய தொன்று"

என்ற பாடலில் இயம்பி சிவனை வணங்குவதையும், நினைப்பதையும் விட மகிழ்ச்சி தரக்கூடிய செயல் வேறொன்றுமில்லை என்கிறார் (Kathirmurugu, 2007).

சான்றோர் பழிக்கும் தீவினைகளைத் தவிர்த்து பக்தியில் நிலைத்திருந்தால் மீண்டும் பிறவாமல் வீடுபேற்றைப் பெறலாம். அம்மையாரும் இக்கருத்தைத் தெளிவுபடுத்திக்கூறி இறைவனைப் பணியாமையால் முப்புரம் எரித்த சிவபெருமானை இகழாமல் எலும்பும் தசையும் கொண்ட இவ்வுடல் கொண்டு பக்தியோடு வணங்குபவர்கள் மீண்டும் பிறவாமல் அப்பேற்றை அடைவார்கள் என்பதை,

"மதியா வடலவுணர் மாமதில்மூன் றட்ட

மதியார் வளர்சடையி னானை மதியாலே

என்பாக்கை யாலிகழா தேத்துவிரேல் இவ்வுலகில்

என்பாக்கை யாய்ப்பிறவார் ஈண்டு"

என்ற பாடல் வழி அறியலாம் (Kathirmurugu, 2007).

தியானம் என்பது இறைவனோடு மனிதனை இணைக்கும் ஓர் அற்புதமான சக்தியாகும். மனமொன்றி தியானம் செய்து உண்மையுடன் சிவனை வழிபட்டால் அளவில்லா அருட்கொடையை அவன் அளிப்பான். ஆதலால் மனமே கருமை நிறம் பொருந்திய கழுத்தினை உடைய சிவபெருமான் மேல் உண்மையாக அன்பு கொண்டு தியானத்தை மேற்கொள்வாய் என்பதனை,

"மைத்தமர்ந்த கண்டத்தான் மற்றவன்பால் நன்னெஞ்சே

மெய்த்தமர்ந்தான் பாய்நீ விரும்பு"

என்ற அடிகளினூடாகக் கூறித் தன்நெஞ்சை சிவபெருமானிடம் தங்கி அன்பாக இருந்து அவனை வழிபடுவாயாக என்று கட்டளையிடுகின்றார் (Kathirmurugu, 2007).

## முடிவுரை

சைவத்தை வளர்த்த நாயன்மார்களுள் ஒருவரான காரைக்கால் அம்மையார் சிவபெருமான் மீது அளவுகடந்த பக்தி கொண்டவர். அந்தாதி எனும் சிற்றிலக்கிய வடிவத்தைத் தமிழுக்கு அறிமுகம் செய்து வைத்தவர் இவரேயாவார். தன் மூன்று படைப்புகள் வழியாகச் சிவபெருமான் குறித்துப் பல்வேறு செய்திகளைப் பகர்ந்து அவரை ஏற்றிப் போற்றியுள்ளார். காரைக்கால் அம்மையார் தன்னுடைய அற்புதத் திருவந்தாதியல் சிவனுடைய சிறப்பியல்புகள் பலவற்றையும் பட்டியலிட்டுக் காட்டியுள்ளதோடு சிவபெருமான் பால் அவரின் மனம் சென்று பக்தியில் திளைத்திருப்பதையும், இப்பிறவி நீங்கி விரைவில் வீடுபேறு பெற்று இறைவனுடைய திருவடிகளை நாளும் தொழும் வரம் வேண்டி நிற்பதிலும் அவருடைய இறைநெறியை காணமுடிகிறது. ஆலயங்களில் இருபுறமும் மற்ற

நாயன்மார்கள் நின்று கொண்டிருக்க, காரைக்கால் அம்மையார் மட்டும் அமரும் உரிமை பெற்றுத் தனிச் சிறப்புக்கு உரியராகக் கருதப்படுகிறார். சமயம் என்பது அறிவைச் சார்ந்தது அல்ல. இதயத்தோடு தொடர்புடையது என்பதை முதன் முதலில் எடுத்துக் கூறியவர் காரைக்கால் அம்மையார். இதுவே பிற்காலத்தில் பக்தி இலக்கியமாக மாறியது. இறைவன் அஞ்சுதற்குரியவன் அல்லன், தன் பெருமை தானறியா எளியவன், அவனுக்கே ஆட்பட்டவர்களாக இருங்கள். வேள்விகள், விரதங்கள், கடுமையான தத்துவ விசாரணைகள் எதுவும் தேவை இல்லை. அவனிடம் அன்பு செலுத்துங்கள் போதும், உங்களுக்கு எதை வேண்டினாலும் தருவான் என்ற கருத்தை உறுதியாகச் சொன்னவர் காரைக்கால் அம்மையார்.

## அடிக்குறிப்புகள்

Kathirmurugu, (2007) Atputha thiruvanthathi moolamum Uraiyum, Saradha Pathippagam, Chennai, India

Natarajan, P.R., (2006) Atputha thiruvanthathi given by Karaikkal Ammaiyar, First Edition, Uma Pathippagam, Chennai, India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License